செ.வெ.எண். 69/பிப்ரவரி தேதி : 26.02.2017

**தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் சாதனை விளக்க சிறப்புப் புகைப்படக் கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.**





---

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க சிறப்புப் புகைப்படக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சியர் திரு.கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் இன்று (26.02.2017) திறந்து வைத்து பார்வையிட்டார்.

இப்புகைப்படக்கண்காட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த திட்டங்கள், நலத்திட்ட உதவிகள் மற்றும் சாதனைகள் அடங்கிய விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர்கள், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி மற்றும் மிதிவண்டி வழங்கும் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், உழவர் பாதுகாப்பு திட்டம், அம்மா குழந்தைகள் நல பரிசு பெட்டகம் வழங்கும் திட்டம் உள்ளிட்ட புகைப்படங்கள் இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது. மேலும் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்துக் கொண்ட முகாம்களில் வழங்கிய நலத்திட்ட உதவிகள் தொடர்பான புகைப்படங்கள் மூலம் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதோடு பொதுமக்கள் அரசின் சாதனைகள், திட்டங்கள் ஆகியவற்றை தெரிந்துக் கொள்ளவும், மிகவும் பயனுள்ளதாகவும் அமைகிறது. இதில் 80-க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் இடம் பெற்றிருக்கிறது. இப்புகைப்படக்கண்காட்சியினை 2000 க்கும் மேற்பட்டோர் பார்வையிட்டு அரசின் நலத்திட்ட உதவிகளை கேட்டறிந்து தெரிந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இரா. சண்முகசுந்தரம், மாவட்ட வழங்கல் அலுவலர் (பொ) திருமதி. மல்லிகா, தருமபுரி மாவட்ட கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத் தலைவர் திரு. எம். பழனிசாமி, ஜெர்த்தலாவ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. வீரமணி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு. பெ. சதீஸ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) திரு. மு. ஜனார்த்தனன் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலக ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.